திரு. எம். ஆர். கண்ணன் : நான் சார்ந்துள்ள பேசின் பிரிட்ஜ் பகுதியில் அதிகமான குடிசைப் பகுதிகள் இருப்பதால், அங்கே எடுக்கப்பட்டுள்ள குடிசைப் பகுதிகள் எவை என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக எந்த ஸ்கீமைப்பற்றிக் கேட்டாலும் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் அவ ருடைய பெயரின் முதல் இரண்டெழுத்திற்கு ஏற்றாற்போல இப்போது கேட்பார்கள். (சிரிப்பு.)

THIRU K. VINAYAKAM : Whereas there are different kinds of slums, Government-owned slums, Corporation-owned slums and privately-owned slums, what is the programme which this Government has got to give relief to the dwellers in privately-owned slums ? The Chief Minister's Fund has been swelling up and it has come to Rs. 40 lakhs. What effective measures to the Government take to bring succour and build houses in private slums which are affected by fire havoc ?

THE HON. THIRU C. N. ANNADURAI : First I want to remove the misconception that the Fund is swelling. It is not swelling, it is standing still. It is not Rs. 40 lakhs, but Rs. 36 lakhs out of which several lakhs have already been spent. When we wanted to build huts in private slums, the owners have objected to it and they have gone to the court also. When we negotiated to purchase certain portions they wanted the market price which is very prohibitive. Therefore we have not built any huts in private slums. If there are huts in private slum areas, even the Corporation cannot provide certain amenities because private slums have to conform to certain rules before they get the Corporation amenities.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டது. 491 ஸ்லம்கள் இருக்கின்றன. இவற்றில் 57 ஸ்லம்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய பணம் மத்திய அரசிடம் இருந்து கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

குடியாத்தம் நகருக்கு புதைச் சாக்கடைத் திட்டம்

*வினா 265—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்து வத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா :—

குடியாத்தம் நகரில் பாதாள சாக்கடை நிறுவும் திட்ட வேலை தற்போது எந்த நிலைமையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: குடியாத்தம் நகருக்கு பாதாள சாக்கடை திட்டத்தை மேற்காள்ளும் உத்தேசம் இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன் : வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய வேலூருக்கு அடுத்தாற்போல மிகப் பெரிய ஜனத்தொகை கொண்ட தொழிலாளர்கள் நிறைந்த பகுதி இந்த நகரம். அப்பேற் பட்ட நகரத்தில் பாதாளச் சாக்கடை இல்லாத காரணத்தினால் கொசு

ஈ போல இருக்கிறது. கொஞ்ச நாளில் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஆகவே இனிமேலாவது உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : உடனடியாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்பு.

(i) செஞ்சி வட்டத்தில் பழ ரசத்தில் போதை வஸ்துக்களைக் கலந்து விற்றதாகக் கூறி விவசாயிகளை தொல்லைப் படுத்தல்.

திரு ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 இன் கீழ், "செஞ்சி வட்டத்தில் பழரசக் கடைகள் கணக் கில்லாமல் லைசன்சு வழங்கியதால் விற்கக் கூடியவர்கள் பழரசத்தில் மது சம்பந்தமான போதை வஸ்துக்களைக் கலந்து விற்பதாகக் கூறி காவல் துறையினர் விவசாயப் பெருங்குடி மக்களை அடிக்கடி தொல்லை கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் ஏழை விவசாயிகளுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கிய முமான காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனித் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 4 (L) 2 உரிம வகைகளும், 3 (L 3) உரிம வகைகளும் செயலில் உள்ளன. L 2 உரிமங்கள் என்பது சாராயம், அபின், மயக்கம் தரும் பிற மருந்துகள் கொண்ட மருந்துத் தயாரிப்புகள், ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் குறித்து வழங்கப்படுபவை யாகும். L 3 உரிமம் ஆயுர்வேத மருத்துவர்கள் மருந்து தயா ரிக்கும் காரியத்திற்காக—வாணிப காரியத்திற்காக அல்ல—வழங்கப்படுவ தாகும். 4. (L 2) உரிம வகைகளின் 2 உரிம வகைகள் ஆயுர்வேத மருந்து தயாரிப்புகளுக்காக வழங்கப்படுபவையாகும். ஒன்று அபின், கஞ்சா கலந்த ஆயுர்வேத மருந்து தயாரிப்பு குறித்ததாகும் மற்ருென்று ஹோமியோபதி மருந்து தயாரிப்பு குறித்ததாகும். செஞ்சி. வட்டத்தில் L 2 அல்லது L 3 உரிமம் எதுவும் செயலில் இல்லை. 1955-ம் ஆண்டு மருந்து, ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் (ஆயத்தீர் வைகள்) சட்டத்தின் கீழும் 1956-ம் ஆண்டு விதிகளின் கீழும் இந்த உரிமங்கள் மாவட்ட வருவாய் அதிகாரியிஞல் வழங்கப்படுகின்றன. இந்த உரிமங்கள் இப்போது இரண்டாண்டுகளுக்கு மேலாகச் செயலில் இருந்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் 1,200 பேர் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு : 1965—41 ; 1966—60 ; 1967—69 ; 1968—6. செஞ்சி வட்டத்தில் தற்போது 9 ஹோமியோபதி மருத்துவர்கள் உள்ளனர். இந்த வட்டத்தில் அண்மை ஆண்டுகளில் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துகொண்ட வர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு: 1965—1 ; 1966—4 ; 1967—4.

இம் மாவட்டத்தில் மருந்து ஒப்பனைப் பொருள் வணிகர் எண் 30 பேருக் குச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மை ஆண்டுகளில் மேற்படி உரிமங்கள் வழங்கப்பெற்றுள்ளவர்களின் எண் ணிக்கை விவரம் வருமாறு: